காலி செய்யத் தயங்குகிறார்கள். ஏனென்று சொன்னால், புதிதாக இருப்பவர்கள் அரசினுடைய பட்டியலில் இருக்க மாட்டார்கள். அவர்களுக்கே அந்த வீடுகள் கிடைக்குமா என்ற சந்தேகத்தினால் காலி செய்யத் தயங்குகிறார்கள். ஆகையினாலே உரிய சான்றிதழ்களோடு அங்கு குடியிருப்பவர்களுக்கே வீடுகளை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் பழுதடைந்திருந்து, குடியிருப்பதற்குத் தகுதியில்லை என்றிருந்தால், நிச்சயமாகப் புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும். அவர்கள் வேறு நபர்களிடம் வீடுகளை வாங்கியிருக்கிறார்கள். அதனால் காலி செய்வதற்கு யோசிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவர்களுக்குச் சொந்தமாக நிலமோ, வீடோ இல்லை என்றால், முன்னுரிமை அடிப்படையிலே அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

3—

சுற்றுச் சாலை

***6490—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம்-சங்கரன்கோவில் சாலையை இணைக்கும் சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம்-சங்கரன்கோவில் சாலையை இணைக்கும் சுற்றுச் சாலை அமைக்க தற்போது விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கோபாலசமுத்திரம்-சங்கரன்கோவில் சாலையை இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்ளம், தென்காசி-திருநெல்வேலி வழியாக தூத்துக்குடி துறைமுகத்திற்கு கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள் செல்கின்றன. அதேபோல அம்பாசமுத்திரம், கோபாலசமுத்திரம் வழியாகப் பேருந்துகளும், கனரக வாகனங்களும் திருநெல்வேலி சென்றடைகின்றன. அதேபோல், சங்கரன்கோவிலிலிருந்து வருகின்ற எல்லா வாகனங்களும் திருநெல்வேலி நகரத்திற்குள்ளே வந்துதான் வெளியே செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நாளுக்குநாள் கனரக வாகனங்களும், பேருந்துகளும் பெருகிக் கொண்டே வருகின்ற இந்தச் சூழ்நிலையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கின்ற வகையில், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை விரைந்து முடித்து, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் போன்ற சாலைகளை இணைக்க வெகு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருநெல்வேலியில் கிலோ மீட்டர் 0/0-லிருந்து 52/0 வரை மேற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணியில் உள்ளடங்கிய ஒரு பகுதி கோபாலசமுத்திரம்-சங்கரன்கோவில் சாலையை இணைக்கும் சுற்றுச் சாலையாகும். இதனை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றவுடன், நில எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றியமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புறவழிச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் புறவழிச் சாலை பணியில் தாராசுரம்-உள்ளூர் சாக்கோட்டை பகுதி சுமார் 12.8 கி.மீ. முடிவடைந்து, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதிப் பகுதிகளான சாக்கோட்டை—மருதாநல்லூர்—தாராசுரம் பகுதிகளில் 9.14 கி.மீ. சாலை அமைக்க நிலம் எடுப்பிற்காக முதல் கட்டப் பணிகள் வருவாய்த் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகப் பிரசித்திபெற்ற மகாமகத்திற்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்களும், வாகனங்களும் கும்பகோணத்திற்கு வருகை தர உள்ளதால், அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணம் புறவழிச் சாலையின் மீதிப் பணியை உடனடியாக விரைவுபடுத்தி, சாலை அமைத்து, 2016-க்குள் முடித்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 *பிப்ரவரி* 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நில எடுப்புப் பணி நடைபெற்று வருகின்றது. அப்பணி முடிவுற்றவுடன் விரைந்து சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகருக்குச் சுற்றுச்சாலை அமைக்கப்படுமா? போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்றுச் சாலை அமைக்கப்படுமா? ஏற்கெனவே 2013-2014-லிலே குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்ய ஆற்றின் கரைமீது மாற்றுச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஆய்வை முடித்து, இந்த ஆண்டே அந்த மாற்றுச் சாலை அமைக்கப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் புறவழிச் சாலை அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. தேசிய நெடுஞ்சாலை 234 இந்தப் புறவழிச் சாலையில் இணைவதால், தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.*